1978 மார்ச் 20]

## புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரி.

*629 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாமன்னர் அரசினர் கல்லூரியில் வரும் கல்வியாண்டில் பட்ட மேற்படிப்புக்கள் தொடங்க நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: தலைவரவர்களே, சிறிது நாளைக்கு முன்பு பத்திரிகையிலே எம்.காம். வருவதாகப் போட்டிருந்தது. அதுபற்றி கேட்டதற்கு அமைச்சரவர்கள் ஆம் என்று இங்கே பதில் சொன்னார்கள். அதே நேரத்தில் கல்லூரியில் இருக்கக்கூடிய இடம் இப்போது இருக்கக்கூடிய வகுப்புகளுக்குத்தான் இருக்கிறது. எம்.காம்., எம்.ஏ. (ஹிஸ்டரி) போன்றவைகளுக்கு அதிக கட்டிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அரசு அதைப் பரிசீலனை செய்து, கட்டிடங்களைக் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த புதுக்கோட்டை கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் படிப்புக்கு என்னென்ன பாடப் பிரிவுகளைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, புதுக்கோட்டை கல்லூரியில் சென்ற ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்குவதைக் குறித்து பல்கலைக்கழக இணைப்பு மானியக் குழு ஆராய்ந்து, ஒப்புதல் அளித்திருக்கிறது. அவர்கள் . இந்தக் கல்லூரியில் எம்.காம். பிரிவைத் தொடங்க அனுமதித்திருக்கிறார்கள்.

## சேலத்தில் மகளிர் கல்லூரி.

*630 வினா—திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் மகளிர் கல்லூரி திறக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 மார்ச் 20

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மக்கள் தொகையில் சரிபாதி எண்ணிக்கையில் இருக்கிற மகளிருக்காக சேலம் மாவட்டத்தில் ஒரு அரசினர் மகளிர் கல்லூரி இல்லாத குறையைப் போக்க வருமாண்டிலாவது மகளிர் கல்லூரி ஒன்றை அங்கே தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, 1974—75 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்தில் புதிய அரசு கலைக் கல்லூரி எதுவும் திறக்கப்படவில்லை. அரசு கலைக் கல்லூரி புதியதாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றால் அந்த இடத்தில் உள்ள பள்ளிக்கூடத்தின் எண்ணிக்கை, அரசு நிதி ஒதுக்கீடு, பல்கலைக் கழக அங்கீகாரம் ஆகியவற்றைப் பொறுத்த தாகும். மேலும் தற்போது உள்ள கலைக் கல்லூரிகளில் குறிப்பாக நகர்ப்புறம் அல்லாத இடங்களில் உள்ள கலைக் கல்லூரிகளில் 20,000-க்கு மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் வழி | .. | .. | .. | 6,477 |
| ஆங்கில வழி | .. | .. | .. | 14,217 |
| மொத்தம் | .. | .. | .. | 20,694 |

ஆகவே தமிழகத்தில் புதிய கலைக் கல்லூரிகள் தற்போது திறக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. கே. எம். அப்துல் ரசாக் : பேரவைத் தலைவரவர்களே, புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது அங்கே இருக்கின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆரம்பிக்கப் படுகிறதா ? அல்லது உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு 5 மைல் சுற்றளவில் கல்லூரி இல்லாத இடங்களில் புதிதாகக் கல்லூரி அமைத்திடும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்லூரிகள் தேவைகளைப் பொறுத்து திறக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.